
# படத்தை அவதானிப்போம்



குறிப்பு :


* படத்தை அவதானிப்போம்.
* படம் பற்றிக் கலந்துரையாடுவோம்.
* இப் படம் பற்றிய 44 ஆம் பக்கத்தில் உள்ள பாடலைப் பாடுவோம்.
* ஆசிரியர் கூறும் கதையை செவிமடுத்துக் கூறுவோம்.

## ஆசிரியர் கூறும் கதையைச் செவிமடுத்துக் கூறுவோம்



குறிப்பு : * மாணவர்களைக் கதை கூறச் செய்வோம்.
* மாணவர்களுக்குத் தெரிந்த கதைகளைக் கூறச் செய்வோம்.

# வேடனும் புறாவும்



குறிப்பு : * படத்தைப் பார்த்து அவதானிக்க வழி நடத்துக.

* படம் தொடர்பான சிறு வினாக்களை வினவி விடையளிக்க வழி நடத்துக

# படம் பார்த்துப் பேசுவோம்



குறிப்பு : * படத்தைப் பார்த்து கலந்துரையாட மாணவர்களை வழிப்படுத்துக.
* படத்தோடு தொடர்புடைய வினாக்களை வினவி விடைகூற வழிப்படுத்துக.
* படம் பற்றி சுயமாகப் பேச மாணவர்களை வழி நடத்துக.

# படம் பார்த்து வாசிப்போம்



குறிப்பு : * படங்கள் குறிக்கும் பெயர்களைத் தெளிவாக உச்சரித்துக் கூற வழிப்படுத்துக.
* இவை போன்ற ஈரெழுத்துச் சொற்கள் கொண்ட படங்களை வாசிக்க வழிப்படுத்துக.


# படம் பார்த்து வாசிப்போம்



குறிப்பு : * படங்கள் குறிக்கும் பெயர்களைத் தெளிவாக உச்சரித்துக் கூற வழிப்படுத்துக

* இவை போன்ற மூவெழுத்துச் சொற்கள் கொண்ட படங்களை வாசிக்க வழிப்படுத்துக.


# படம் பார்த்து வாசிப்போம்



குறிப்பு :
* படங்கள் குறிக்கும் பெயர்களைத் தெளிவாக உச்சரித்துக் கூற வழிப்படுத்துக.
* இவை போன்ற நான்கு, ஐந்து எழுத்துச்சொற்கள் கொண்ட படங்களை வாசிக்க வழிப்படுத்துக.

# படம் பார்த்துச் செயல் கூறுவோம்















குறிப்பு :
* படங்களை அவதானிக்கச் செய்க.
* படங்கள் குறிக்கும் செயல்களை சுயமாகக் கூற மாணவர்களை வழிநடத்துக.
* இவை போன்று வேறு படங்களைக் காண்பித்து செயல் கூற வழிப்படுத்துக.

(பார்வை பிரித்தறிகை)

# வித்தியாசமான உருவத்தை இனங்காண்போம்




| | | | | |
|---|---|---|---|---|
| ப | ப | ய | ப | ப |
| ர | ர | ர | ா | ர |
| த | ற | த | த | த |
| ம | ம | ம | ம | ழ |

குறிப்பு : * உருவங்களை நுணுகி அவதானித்து வித்தியாசங்களைக் கண்டறிக.
* எழுத்துக்களை வாசிக்க வேண்டாம்.
* வடிவங்களில் உள்ள வேறுபாட்டைக் காணவும்.

## வாசித்தலுக்கு முன் ஆயத்தஞ் செய்தல்
(பார்வை பிரித்தறிகை)

# வித்தியாசமான உருவத்தை இனங்காண்போம்




| | | | | |
|---|---|---|---|---|
| ப | ப | ட | ப | ப |
| ச | க | க | க | க |
| ன | ன | ன | ள | ன |
| ல | ல | ல | ல | வ |
| ந | ற | ந | ந | ந |

குறிப்பு : * உருவங்களை நுணுகி அவதானித்து வித்தியாசங்களைக் கண்டறிய வழிப்படுத்துக.
* எழுத்துக்களை வாசிக்கச் செய்தல் வேண்டாம்.
* வடிவங்களில் உள்ள வேறுபாட்டை இனங்காணச் செய்க.

சொற்களை வாசித்து ஒலிகளையும் எழுத்துக்களையும் இனங்காணல்

## வாசிப்போம்



அம்மா

| | | |
|---|---|---|
| அ | ம் | மா |




அப்பா

| | | |
|---|---|---|
| அ | ப் | பா |

குறிப்பு : * படம் பார்த்துச் சொற்களை வாசித்து எழுத்துக்களை இனங்காண வழிப் படுத்துக.

## வாசிப்போம்



அக்கா

| | | |
|---|---|---|
| அ | க் | கா |



அண்ணா

| | | |
|---|---|---|
| அ | ண் | ணா |



தங்கை

| | | |
|---|---|---|
| த | ங் | கை |



தம்பி

| | | |
|---|---|---|
| த | ம் | பி |

குறிப்பு : * படம் பார்த்துச் சொற்களை வாசித்து எழுத்துக்களை இனங்காண வழிப் படுத்துக.

## வாசிப்போம்



என் அக்கா

இவர் என் அக்கா.



என் அண்ணா

இவர் என் அண்ணா.



என் தங்கை

இவர் என் தங்கை.



என் தம்பி

இவர் என் தம்பி.

| | | | |
|---|---|---|---|
| எ | இ | ன் | ர் |

*குறிப்பு :* * படம் பார்த்துச் சொற்களை வாசித்து எழுத்துக்களையும் சொற்களையும் அறிய வழிப்படுத்துக.

# பாடுவோம்



நிலா நிலா ஓடி வா
நில்லாமல் ஓடி வா
மலை மேல் ஏறி வா
மல்லிகைப்பூக் கொண்டு வா
நிலா நிலா வா வா
நில்லாமல் ஓடி வா

| | | |
|---|---|---|
| நிலா | வா | மலை |
| ஓடி | ஏறி | கொண்டு |

| |
|---|
| மல்லிகைப்பூ |

குறிப்பு : * கேட்டும் வாசித்தும் பாட வழிப்படுத்தி, எழுத்துக்களையும் சொற்களையும் இனங்காண நெறிப்படுத்துக.

படங்களின் துணையுடன் சொற்களை வாசித்தல் - எழுத்தொலிகள் நீண்டு ஒலித்தலை இனங்காணல்


## வாசிப்போம்



பந்து




பாம்பு



வண்டி



வாத்து




சங்கு



சாவி




இலை



ஈட்டி



குதிரை



கூடு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ந் | த் | ட் | ச | பு | ஈ | கூ | டி |

| | | |
|---|---|---|
| பா | வா | சா |

குறிப்பு : * எழுத்தொலிகள் குறுகியும், நீண்டும் ஒலித்தலையும் அதற்கான வரிவடிவத்தையும் மனதில் நிலைநிறுத்த வழிப்படுத்துக.

படங்களின் துணையுடன் சொற்களை வாசித்தல் - எழுத்தொலிகள் நீண்டு ஒலித்தலை இனங்காணல்

## வாசிப்போம்



அணில்



ஆடு




கண்



காது



தலை



தாமரை



நண்டு



நாய்



மரம்




மாடு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| து | ஆ | ணி | ய் | ய | டு | ந |
| | | பா | வா | சா | | |

குறிப்பு : * இவை போன்ற வேறு சொற்களையும் வழங்கி குறுகிய, நீண்ட ஒலிகளையும் வரிவடிவங்களையும் அறிய வழிப்படுத்துக.

## வாசிப்போம்



## மழை பெய்தது

வானம் கறுத்தது.

மின்னல் மின்னியது.

இடி இடித்தது.

குளிர் காற்று வீசியது.

மரங்கள் சரிந்து ஆடின.

மழை பெய்தது.


எங்கும் வெள்ளம் பாய்ந்தது.

| | | | |
|---|---|---|---|
| வானம் | மின்னல் | இடி | காற்று |
| மரங்கள் | மழை | வெள்ளம் | |

குறிப்பு : * தெளிவாக உச்சரித்து, பொருள் விளங்கி வாசிக்க. ஏற்ற வினாக்களை வினவுக.

### வினைச் சொற்களை வாசித்தல் - அதற்கேற்பத் துலங்குதல்

## வாசிப்போம் - செய்வோம்

| | |
|---|---|
| நில் |  |
| இரு |  |
| எழும்பு |  |
| நட |  |
| ஓடு |  |

குறிப்பு : * ஒருவர் இக்கட்டளைகளை வாசிக்க ஏனைய மாணவர்கள் துலங்க வழிப் படுத்தலாம். இவை போன்ற வேறு கட்டளைகளையும் வழங்குக. மரியாதையுடனும் கூறுக. உதாரணம் : இரு, இருங்கள்.


# வாசிப்போம் - செய்வோம்




முகம் கழுவு



புத்தகம் எடு



பாடம் படி



பந்து அடி

*குறிப்பு :* * இவை போன்று வேறு கட்டளைகளை வாசிக்க.
அதற்கேற்பத் துலங்க வழி நடத்துக.

## எழுதுவோம்

அ ம ட ப ர

க ஈ எ ன

## புள்ளிகளைச் சேர்த்து எழுதுவோம்

அ ம ட ப ர

க ஈ எ ன

அ ம ட ப ர

க ஈ எ ன

ட ப ர ன எ

குறிப்பு : * மேற் காட்டியவாறு எல்லா எழுத்துக்களையும் உரிய அளவு, வடிவம், திசைமுகம் என்பவற்றை அனுசரித்து எழுத வழி நடத்துக.

* உரிய முறைப்படி பென்சிலைப் பிடித்து எழுத வழிப்படுத்துக.

உயிர்மெய் எழுத்துக்களின் ஒலி, வரி வடிவங்களின் வேறுபாடுகளை இனங்காணல்

## வாசிப்போம்





அணில்
அம்மி
அம்பு
அன்பு

கரும்பு
சங்கு
தங்கம்
நரி
பந்து
வயல்

கண்
சட்டி
தவளை
நண்டு
பல்லி
வண்டு

கரும்பு இனிக்கும்.
பந்து அடிப்போம்.
அணில் பழம் தின்னும்.

| | | |
|---|---|---|
| க் | ச் | த் |
| | | |
| க | ச | த |

அ


| | | |
|---|---|---|
| ப் | ந் | வ் |
| | | |
| ப | ந | வ |

குறிப்பு : * "அ" ஒலியை ஏற்று வரும் உயிர்மெய் எழுத்துக்களை அறிமுகஞ் செய்க.

*உயிர்மெய் எழுத்துக்களின் ஒலி, வரி வடிவங்களின் வேறுபாடுகளை இனங்காணல்*

## வாசிப்போம்





| | | |
|---|---|---|
| ஆடு | காடு | காகம் |
| ஆமை | சாடி | சாந்தி |
| ஆணி | தாடி | தாமரை |
| ஆந்தை | நாடு | நாள் |
| | பாட்டு | பாக்கு |
| | மாடு | மாதம் |
| | வாழை | வானம் |

காகம் கரையும்.

பாடம் படிப்போம்.

ஆடு குழை தின்னும்.

| க் | ச் | த் |
|---|---|---|
| | | |
| கா | சா | தா |

| ஆ | ா |
|---|---|


| ந் | ப் | ம் | வ் |
|---|---|---|---|
| | | | |
| நா | பா | மா | வா |

குறிப்பு : * "ஆ" ஒலியை ஏற்று வரும் உயிர்மெய் எழுத்துக்களை அறிமுகஞ் செய்:

உயிர்மெய் எழுத்துக்களின் ஒலி, வரி வடிவங்களின் வேறுபாடுகளை இனங்காணல்

## வாசிப்போம்





| | | |
|---|---|---|
| இலை | கிளி | கிழவி |
| இரண்டு | சிலை | சிறகு |
| இலங்கை | திங்கள் | திசை |
| இனிமை | நிறம் | நிலா |
| | பிட்டு | பிள்ளை |
| | மிளகு | மின்னல் |
| | விசிறி | விரல் |

கிளி பேசும்.

இலங்கை எமது நாடு.

மின்னல் மின்னியது.

| க் | ச் | த் |
|---|---|---|
| | | |
| கி | சி | தி |


| இ | ி |
|---|---|

| ந் | ப் | வ் |
|---|---|---|
| | | |
| நி | பி | வி |

*குறிப்பு :* * "இ" ஒலியை ஏற்றுவரும் உயிர்மெய் எழுத்துக்களை அறிமுகஞ் செய்க.

உயிர்மெய் எழுத்துக்களின் ஒலி, வரி வடிவங்களின் வேறுபாடுகளை இனங்காணல்

## வாசிப்போம்





| | | |
|---|---|---|
| ஈட்டி | கீரை | கீரி |
| ஈசன் | சீப்பு | சீட்டு |
| ஈரம் | நீலம் | நீர் |
| ஈ | வீடு | வீணை |

ஈ நோய் பரப்பும்.
கீரை உண்போம்.
சுத்தமான நீர் குடிப்போம்.

| | |
|---|---|
| க் | ச் |
| | |
| கீ | சீ |

| | |
|---|---|
| ஈ | ீ |


| | |
|---|---|
| ந் | வ் |
| | |
| நீ | வீ |

குறிப்பு : * "ஈ" ஒலியை ஏற்றுவரும் உயிர்மெய் எழுத்துக்களை அறிமுகஞ் செய்க.

*உயிர்மெய் எழுத்துக்களின் ஒலி, வரி வடிவங்களின் வேறுபாடுகளை இனங்காணல்*

## வாசிப்போம்





| | | |
|---|---|---|
| உரல் | குருவி | குடை |
| உறி | சுளகு | சுத்தம் |
| உப்பு | தும்பி | துலா |
| உலகம் | நுங்கு | நுளம்பு |
| | புல் | புறா |
| | முயல் | முகம் |

பசு புல் மேயும்.

காலையில் முகம் கழுவு.

முயல் துள்ளித் துள்ளி ஓடும்.


| |
|---|
| ச் |
| |
| சு |


| | | | |
|---|---|---|---|
| உ | ၊ | ◡ | ு |

| | |
|---|---|
| க் | ந் |
| | |
| கு | நு |

குறிப்பு : * "உ" ஒலியை ஏற்றுவரும் உயிர்மெய் எழுத்துக்களை அறிமுகஞ் செய்க.

## வாசிப்போம்





| | | |
|---|---|---|
| ஊசி | கூடை | கூடு |
| ஊஞ்சல் | சூரியன் | சூடு |
| ஊதா | தூண் | தூசி |
| ஊர் | நூல் | நூறு |
| | பூ | பூட்டு |
| | மூடி | மூக்கு |

பூமாலை கட்டுவோம்.
குருவி கூடு கட்டும்.
சூரியன் காலையில் உதிக்கும்.

| |
|---|
| ப் |
| |
| பூ |

| | | | |
|---|---|---|---|
| ஊ | ு | ூ | ூ |

| | |
|---|---|
| ம் | த் |
| | |
| மூ | தூ |

குறிப்பு : * "ஊ" ஒலியை ஏற்றுவரும் உயிர்மெய் எழுத்துக்களை அறிமுகஞ் செய்க.

## வாசிப்போம்





| | | |
|---|---|---|
| எலி | செடி | செய்தி |
| எறும்பு | தென்னை | தெற்கு |
| எட்டு | நெல் | நெருப்பு |
| எருமை | பெட்டி | பெண் |
| எழுத்து | மெத்தை | மெழுகு |
| | வெள்ளை | வெடி |

தென்னைமரம் உயரமானது.
எறும்பு சுறுசுறுப்பானது.
அது மிளகாய்ச் செடி.

| | | |
|---|---|---|
| ச் | த் | ந் |
| | | |
| செ | தெ | நெ |

| | |
|---|---|
| எ | ெ |

| | | |
|---|---|---|
| ம் | ப் | வ் |
| | | |
| மெ | பெ | வெ |

குறிப்பு : * "எ" ஒலியை ஏற்றுவரும் உயிர்மெய் எழுத்துக்களை அறிமுகஞ் செய்க.

உயிர்மெய் எழுத்துக்களின் ஒலி, வரி வடிவங்களின் வேறுபாடுகளை இனங்காணல்

## வாசிப்போம்





| | | |
|---|---|---|
| ஏ டு | தே ன் | தே ர் |
| ஏ ணி | கே ணி | கே டு |
| ஏ ர் | நே ரம் | நே ற்று |
| ஏ ரி | பே ன் | பே னா |
| | மே சை | மே ளம் |
| | வே ட்டி | வே டன் |

தேன் இனிக்கும்.
வேடன் ஓடினான்.
சேவல் காலையில் கூவும்.

| | | |
|---|---|---|
| த் | க் | ந் |
| | | |
| தே | கே | நே |


| | |
|---|---|
| ஏ | ே |

| | | |
|---|---|---|
| ச் | ம் | வ் |
| | | |
| சே | மே | வே |

குறிப்பு : * "ஏ" ஒலியை ஏற்று வரும் உயிர்மெய் எழுத்துக்களை அறிமுகஞ் செய்க.

## வாசிப்போம்



| | | |
|---|---|---|
| ஐயா | தங்கை | பலகை |
| ஐந்து | இசை | பசை |
| ஐப்பசி | தை | கழுதை |
| ஐம்பது | பானை | பூனை |

மழை பெய்தது.

தங்கை வந்தாள்.

கழுதை உதைக்கும்.

| க் | ச் |
|---|---|
| | |
| கை | சை |


| ஐ | ை |
|---|---|

| த் | ன் |
|---|---|
| | |
| தை | னை |

குறிப்பு : * "ஐ" ஒலியை ஏற்றுவரும் உயிர்மெய் எழுத்துக்களை அறிமுகஞ் செய்க.

## வாசிப்போம்





| | | |
|---|---|---|
| ஒன்று | கொடி | கொக்கு |
| ஒன்பது | சொல் | சொண்டு |
| ஒளி | தொழில் | தொட்டி |
| ஒட்டகம் | நொடி | நொண்டி |
| மொழி | மொட்டு | |

வெள்ளைக் கொக்கு.
ஒன்பது ஒட்டகங்கள்.
மொழி கற்போம்.

| க் | ச் | த் |
|---|---|---|
| | | |
| கொ | சொ | தொ |


| | | |
|---|---|---|
| ஒ | ெ | ா |


| ந் | ப் | ம் |
|---|---|---|
| | | |
| நொ | பொ | மொ |

*குறிப்பு :* ✳ "ஒ" ஒலியை ஏற்றுவரும் உயிர்மெய் எழுத்துக்களை அறிமுகஞ் செய்க.

உயிர்மெய் எழுத்துக்களின் ஒலி, வரி வடிவங்களின் வேறுபாடுகளை இனங்காணல்

## வாசிப்போம்





| | | |
|---|---|---|
| ஓ லை | கோ யில் | கோ ழி |
| ஓ டு | சோ லை | சோ று |
| ஓ டம் | தோ ட்டம் | தோ சை |
| ஓ நாய் | நோ ய் | நோ ன்பு |
| ஓ சை | போ ர் | போ த்தல் |
| ஓ வியம் | | |

கோழி முட்டை இடும்.
சோறு சமைப்போம்.
கோயில் மணி ஓசை கேட்கிறது.

| க் | ச் | த் |
|---|---|---|
| | | |
| கோ | சோ | தோ |

| | | |
|---|---|---|
| ஓ | ே | ா |

| ந் | ப் |
|---|---|
| | |
| நோ | போ |

குறிப்பு : * "ஓ" ஒலியை ஏற்றுவரும் உயிர்மெய் எழுத்துக்களை அறிமுகஞ் செய்க.

உயிர்மெய் எழுத்துக்களின் ஒலி, வரி வடிவங்களின் வேறுபாடுகளை இனங்காணல்.

## வாசிப்போம்



ஔவையார்



வௌவால்

சௌக்கியம்

நீங்கள் சௌக்கியமா ?
வௌவால் பழங்கள் தின்னும்.
ஔவைக் கிழவி நம் கிழவி.

| வ் |
| --- |
| |
| வௌ |

| ஔ | ெ | ள |
| --- | --- | --- |

| ச் | ம் |
| --- | --- |
| | |
| சௌ | மௌ |

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ ஃ

குறிப்பு : ✷ "ஔ" ஒலியை ஏற்றுவரும் உயிர்மெய் எழுத்துக்களை அறிமுகஞ் செய்க

தெளிவாக உச்சரித்துப் பாடுதல்




## மரம் வளர்ப்போம்

மரமே மரமே பூ தருவாய்
பூவே பூவே காய் தருவாய்
காயே காயே கனி தருவாய்
கனியே கனியே விதை தருவாய்
விதையே விதையே செடி தருவாய்
செடியே செடியே மரம் தருவாய்
மரமே மரமே மழை தருவாய்
மரத்தை வளர்த்தே வளம் பெறுவோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| பூ | காய் | கனி | விதை | செடி |
| | மரம் | மழை | வளம் | |

குறிப்பு : * பாடலை வாசிக்கவும் இசையோடு பாடவும் வழிப்படுத்துக.



## பசு

இது ஒரு பசு.
இது எங்கள் பசு.
பசு புல் மேயும்.
பசு பால் தரும்.
பசுக்கன்று துள்ளி ஓடும்.
பசுவை அன்பாய் வளர்ப்போம்.

| | | | |
|---|---|---|---|
| பசு | புல் | பால் | கன்று |
| துள்ளி | ஓடும் | வளர்ப்போம் | |

குறிப்பு : * நன்கு வாசிக்கத்தக்க மாணவர்களுக்கு வாசித்துப்பழக வேறு பந்திகளை வழங்குக.



அக்கா வீட்டுத் தோட்டம் பார்
அங்கே வளரும் செடிகள் பார்
பச்சை நிறத்தில் கீரை பார்
பஞ்ச வர்ணப் பூக்கள் பார்

| | | | |
|---|---|---|---|
| க் | ங் | ச் | ஞ் |

கட்டை வாழை மரத்தைப் பார்
கண்ணைக் கவரும் குலையைப் பார்
முத்துச் சிந்தும் மல்லிகை பார்
முந்தித் தாவும் கொடிகள் பார்

| | | | |
|---|---|---|---|
| ட் | ண் | த் | ந் |

குறிப்பு : * மெய் எழுத்துக்களை வரிசைக் கிரமத்தில் அறிமுகஞ் செய்க.



அப்பா நட்ட மிளகாய் பார்
அம்மா விரும்பும் கரும்பு பார்
கொய்யா மரத்தில் பழங்கள் பார்
ஆர்வம் கொள்ளும் அணிலைப் பார்

| | | | |
|---|---|---|---|
| ம் | ப் | ய் | ர் |

எல்லாம் செடிகள் கொடிகள் பார்
எவ்வளவு செழிப்பாய் வளரும் பார்
வாழ்வில் பணியும் பூசணி பார்
பள்ளம் பார்த்துப் படரும் பார்

| | | | |
|---|---|---|---|
| ல் | வ் | ழ் | ள் |

குறிப்பு : * மெய் எழுத்துக்களை வரிசைக் கிரமத்தில் அறிமுகஞ் செய்க.



**கற்பனை இல்லை கண்ணால் பார்**
**அன்னை இயற்கை வளமே பார்**

| | |
|---|---|
| ற் | ன் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் | ங் | ச் | ஞ் | ட் | ண் |
| த் | ந் | ப் | ம் | ய் | ர் |
| ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |

குறிப்பு : * எழுத்தொலிகளுடன் வரிவடிவத்தைத் தொடர்புபடுத்தி விளக்குக.



நாங்கள் சந்தைக்குப் போவோம்.
சந்தையில் என்ன வாங்கலாம் ?
சந்தையில் காய்கறிகள் வாங்கலாம்.

| | |
|---|---|
| கத்தரிக்காய் | வாழைக்காய் |
| வெண்டிக்காய் | பூசணிக்காய் |
| முருங்கைக்காய் | பயற்றங்காய் |



வேறு என்ன பொருள்கள் வாங்கலாம் ?
சந்தையில் பழங்கள் வாங்கலாம்.


| | |
|---|---|
| வாழைப்பழம் | மாம்பழம் |
| பலாப்பழம் | தோடம்பழம் |
| விளாம்பழம் | அன்னாசிப்பழம் |


நாங்கள் சந்தைக்குப் போவோம்.
காய்கறிகள், பழங்கள் வாங்குவோம்.



குறிப்பு : * இவை போன்ற வேறு பந்திகளையும் வாசிக்கச் செய்யலாம்.

## நிறங்கள்

 கொக்கு  வெள்ளை நிறம்

 காகம்  கறுப்பு நிறம்


 வானம்  நீல நிறம்



 தக்காளிப் பழம்  சிவப்பு நிறம்


கொக்கு வெள்ளை நிறம்.
காகம் கறுப்பு நிறம்.
வானம் நீல நிறம்.
தக்காளிப்பழம் சிவப்பு நிறம்.

குறிப்பு : * வினாக்கள் வினவி நிறங்கள் தொடர்பான எண்ணக்கருவை மாணவர் மனங்களிற் பதியச் செய்க.

## நிறங்கள்

 இலை  பச்சை நிறம்

 மாம்பழம்  மஞ்சள் நிறம்

 கத்தரிக்காய்  ஊதா நிறம்

இலை பச்சை நிறம்.
மாம்பழம் மஞ்சள் நிறம்.
கத்தரிக்காய் ஊதா நிறம்.


| | | |
|---|---|---|
| வெள்ளை | கறுப்பு | நீலம் |
| சிவப்பு | பச்சை | மஞ்சள் |
| | ஊதா | |

குறிப்பு : * வினாக்கள் கேட்டு நிறங்கள் தொடர்பான எண்ணக்கருவை மாணவர் மனங்களிற் பதியச் செய்க.

## சுவைகள்



கரும்பு இனிக்கும். **இனிப்பு**



மாங்காய் புளிக்கும். **புளிப்பு**




பாகற்காய் கசக்கும். **கசப்பு**



மிளகாய் உறைக்கும். **உறைப்பு**




உப்பு உவர்க்கும் **உவர்ப்பு**



பாக்கு துவர்க்கும். **துவர்ப்பு**

## ஒலிகள்




“கா கா” என்று கரையும்.



“கொக்கரக்கோ” என்று கூவும்.



“வள் வள்” என்று குரைக்கும்.



“கூ கூ” என்று கூவும்.



“ம்ஆ ம்ஆ” என்று கத்தும்.

# படிக்கப் போகிறேன்

குருவிக் குஞ்சே குருவிக் குஞ்சே
எங்கே போகிறாய் ?
கொத்திக் கொத்தித் தானியத்தைத்
தின்னப் போகிறேன்.

சின்ன அணில் பிள்ளை நீயும்
எங்கே போகிறாய் ?
வண்ண மாம்பழத்தை நானும்
தின்னப் போகிறேன்.

ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி
எங்கே போகிறாய் ?
ஆலிலையும் கோரைப் புல்லும்
தின்னப் போகிறேன்.

செல்லப் பாப்பா செல்லப் பாப்பா
எங்கே போகிறாய் ?
பள்ளிக்கூடம் சென்று நானும்
படிக்கப் போகிறேன்.

# பேசுவோம் கேட்போம் பார்ப்போம்



தொலைபேசி

தொலைபேசியில் உரையாடலாம்.



வானொலி

வானொலியில் பாடல்களைக் கேட்கலாம்.



தொலைக்காட்சி

தொலைக்காட்சியில் நாடகங்களைப் பார்க்கலாம்.

*குறிப்பு :* * இவை போன்ற நவீன தொடர்பாடற் சாதனங்களை அறிமுகம் செய்க.

# கிழமைகள்

1. திங்கட்கிழமை
2. செவ்வாய்க்கிழமை
3. புதன்கிழமை
4. வியாழக்கிழமை
5. வெள்ளிக்கிழமை
6. சனிக்கிழமை
7. ஞாயிற்றுக்கிழமை

ஒரு கிழமையில் ஏழு நாள்கள் உண்டு.

வெள்ளிக்கிழமை புனித நாள் ஆகும்.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் ஆகும்.

# நான் யார் ?

1. எனது பெயர் ..............................

2. எனது வயது ..............................

3. என் அப்பா பெயர் ..........................

4. என் அம்மா பெயர் ........................

5. நான் ............ என்னும் இடத்தில் வசிக்கிறேன்.

6. நான் .................. வகுப்பில் படிக்கிறேன்.

7. நான் விரும்பும் உணவு .....................

8. எனது செல்லப் பிராணி........................

9. நான் விரும்பும் விளையாட்டு ..................

குறிப்பு : * சரியாகப் பூர்த்தி செய்ய தெளிவாக வழிப்படுத்துக.

# தமிழ் அரிச்சுவடி

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ |
| த் | த | தா | தி | தீ | து | தூ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ |

ஆய்த எழுத்து ஃ

| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|
| கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| பெ | பே | பை | பொ | போ | பௌ |
| மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| னெ | னே | னை | னொ | னோ | னௌ |

# ஆத்தி சூடி

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண், எழுத்து இகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டு உண்.
10. ஒப்புரவு ஒழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஔவியம் பேசேல்.